**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.142/2025** |
| Deposition of witness | : | P.W.2 |
| Name | : | கலா |
| Father's /Husband Name | : | பன்னீர் செல்வம் |
| Village | : | ஆழியன் தோப்பு, செம்பியன்கூந்தலூர் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 40 |
| Occupation | : | வீட்டுக்குடித்தனம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 01st day of November 2025.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது ஆழியன் தோப்பு செம்பியன் கூந்தலூரில் குடியிருந்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 பன்னீர்செல்வம் எனது கணவர். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டு பெண். கடந்த 16.06.2025 ம் தேதி மாலை 05.00 மணியளவில் நானும் எனது கணவர் பன்னீர் செல்வமும் எங்கள் வீட்டின் கொல்லையை சுத்தம் செய்வதற்காக போனோம். அதில் அப்போது எனது கொல்லைப்புறம் செல்லும் பாதையில் காட்டுக்கருவை முள் கிடந்தது. அந்த முள்ளை எனது கணவர் எடுக்க போகும் போது அப்போது ஆஜர் எதிரி ரூபிலா ஏன் அந்த முள்ளை எடுக்குற என்று சொல்லி குச்சிகாரி மகனே, தேவிடியா மகனே என அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, மறைத்து வைத்திருந்த அரிவாளால் உன்னை வெட்டாமல் விடமாட்டேன் என்று எனது கணவரின் தலையில் வெட்டினார். அதில் அவருக்கு இரத்தக்காயம் ஏற்பட்டது. ஆஜர் எதிரி அரிவாளை வைத்துக்கொண்டு கொலை செய்யாமல் விடமாட்டேன் என்றும் குடும்பத்தை அறுத்துவிடுவேன் என்றும் அரிவாளை வைத்துக்கொண்டு மிரட்டினார். அவ்வாறு மிரட்டியதால் எனக்கு மிகவும் மனஉளைச்சல் ஏற்பட்டது.

எனது கணவருக்கு ஏற்பட்ட காயத்திற்காக ரிக்கிபாண்டி என்பவரது ஆட்டோ மூலம் சிகிச்சைக்காக நானும் மற்றும் ஜேக்கப், ராஜேஷ் ஆகியோர் உதவியுடன் எனது கணவரை நன்னிலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு மருத்துவர் அவருக்கு தலையில் ஏற்பட்ட காயத்திற்காக ஆறு தையல் போட்டார்கள். மேல் சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலமாக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். இது சம்மந்தமாக எரவாஞ்சேரி போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.01 13:07:11 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`